Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி௴ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ ஐப்பசி௴ ௨ ௨ வெள்ளிக்கிழமை (18 OCTOB 1957) [இல-௨அ]

அரசியல் அலை

## கடற்படைத்தளம் கைமாறிவிட்டது

### திருக்கோணமலையை ஆங்கிலேயர் விட்டுச் சென்றனர்

### இயற்கைத் துறைமுகத்தை - இலங்கை பயன்படுத்த ஏற்பாடுகள்

போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் போன பின்பு நூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கிலேயரின் கடற்படைத் தளமாக விளங்கிய திருக்கோணமலை காலச் சக்கரத்தின் மாறுதலினால் மறுபடியும் இலங்கையர் கையில் அமைந்துவிட்டது. வரலாற்று மகிமையும் வான் சிறப்பும் திருத்தலச் சீரும் செம்மையாயமைந்த திருக்கோணமலை உலகப் புகழ் வாய்ந்ததென்றால் உண்மையே!

இயற்கையின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக இந்தத் துறைமுகம் இருப்பதை அந்நிய அரச தூதுவர்களும் மாலுமிகளும் அவதானித்து அதன் ஆட்சியை அடைவதற்கு யுத்தங்களைப் பயன்படுத்தி ஒப்பந்தங்களினாலும் உடன்படிக்கைகளினாலும் இலங்கையின் உரிமையைப்பெற்றனர். ஆனால் ஆங்கிலேயர்கள்தான் கடற்படைத் தளமாகப் பயன்படுத்த மிக முயன்று பாதுகாத்து வந்தனர்.

உலகமகாயுத்தங்கள் இரண்டிலும் திருக்கோணமலை இலங்கையின் பாதுகாப்பு வாயிலாகவும் ஐக்கிய நாடுகளுக்கு அரணும் அடைக்கலமும் ஆகவும் விளங்கியது.

ஐப்பசி மாதம் 15-ந் திகதி (புரட்டாசித் திங்கள் 29-ம் நாள்) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஏழு நிமிடங்கள் இருக்கும் சரித்திரப் புகழ்படைக்கும் வேளையில் இங்கிலாந்தின் இலங்கை உயர் ஆணையாளராகக் கடமையாற்றும் திரு. குரெ சுவைற்று திருக்கோணமலைத் தளத்தை இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயகவிடம் பொறுப்புக் கொடுத்தார். அந்தச் சந்தோஷமான சந்தர்ப்பத்தில் இங்கிலாந்தின் கடற்படைக்கொடி இறங்கியது. இலங்கையின் கடற்படைக் கொடி ஏறியது.

## அறிவாளியாக்கும் முறை

### ஊக்கமுள்ள துறையில் ஒருவரை இடுபடுத்தலாகும்

ஒருவருடைய இளமையிலேயே எத்துறையில் ஒருவருக்கு ஊக்கமும், ஆக்கமும் இருக்கிறதோ அத்துறையில் அவரை ஈடுபடுத்துவதின்மூலம் அவர் சிறந்த அறிவாளியாக மாறுகிறார். இதுவே சமூக முன்னேற்றத்திற்கு மிக முக்கியமாகும். ஆணும் பெண்ணும் முக்கியமாகக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும். ஐரோப்பா. அமெரிக்கா, சப்பான் முதலிய அயல்நாடுகளிலெல்லாம் ஆண்களும் பெண்களும் சமமாகக் கல்வி கற்கிறார்கள். எனவேதான் அவர்கள் நம்மைவிட விரைவில் முன்னேறுகிறார்கள்.

நமது நாட்டுப் பெண்களைவிட அமெரிக்க பெண்களுக்கு உரிமை அதிகம் இருப்பதாக நாம் நினைக்கிறோம். அது தவறாகும். அவர்கள் வெளியுலகத்திற்கு அப்படிக் காட்டிக் கொள்ளுகிறார்களே தவிர நம்மைப்போல ஊதியத்தைப் பெண்மக்களிடம் கொடுத்துவிட்டு, சிறிது சிறிதாக வாங்கிச் செலவழிப்பதில்லை. எனவே இந்தியப் பெண்களைவிட அமெரிக்கப் பெண்கள் அதிக உரிமையைப் பெற்றுவிடவில்லை என்று கலாநிதி திரு. சோ. இலட்சுமணன் செட்டியார் அவர்கள் திருச்சினாப்பள்ளியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கக் கூட்ட மொன்றிற் பேசும்போது கூறினார்.

### வண்ணை மேற்கு விசுவேசப் பிள்ளையார் கோவில்

மேற்படி கோவில் பரிபாலன சபையின் பன்னிரண்டாவது வருடாந்தக் கூட்டம் 29-9-57 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மேற்படி கோவில் மண்டபத்தில் திரு. அ. விசயரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்றபொதுக் கூட்ட அறிக்கை, காரியதரிசியின் வருடாந்த அறிக்கை தனாதிகாரியின் வருடாந்த வரவு செலவுக கணக்குகள் முதலியவை சபைக்குச் சமர்ப்பிக்கப் பட்டன.

காரியதரிசி தனது வருடாந்த அறிக்கையில, கோவில் நித்திய நைமித்திக பூசைகள், திருவிழாக்கள் முதலியன விதிப்படி ஒழுங்காக நடைபெற்றன என்பதைக் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாக 19 அங்கத்தவர்களைக் கொண்ட 1957 - 1958-ம் வருட நிர்வாகசபை தெரியப்பட்டது. 1957 - 1958-ம் வருட உத்தியோகத்தர் பின்வருமாறு நடைபெற்றது,

தலைவர் திரு அ. விசயரத்தினம், அதிபரும் தனாதிகாரியும்: திரு. க. கனகரத்தினம், கௌரவகாரியதரிசி திரு. க. துரைச்சாமி, கணக்குப்பரிசோதகர்: மூதாந்திரம் க. துரையப்பா.

## தீபாவலித் திருநாள்

### அல்லவை நீக்கி நல்லவை செய்தின்புறும் நாள்

20—10—57

ஐப்பசி மாசத்து அமாவாசைக்கு முதல்நாளாகிய சதுர்த்தசி திதி பொருந்திய தினத்தில் தீபாவலித் திருநாள் கொண்டாடப்படுவதாகும். இத்திருநாள் இவ்வாண்டு ஐப்பசி 6-ந் திகதி செவ்வாய்க்கிழமை 22-10-57) வருகின்றது.

இத்தினத்தில் சைவமக்கள் யாவரும் ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து ஆசாரசீலராய் ஆலய வழிபாடாற்றி விரதமனுட்டித்தல் விதிக்கப்பட்டுள்ளது. அன்றியும் வசிக்கும் வீட்டிலும், வாயிலிலும், கிணறு மாட்டுத் தொழுவம் முதலிய இடங்களிலும் எண்ணெய் விளக்கேற்றுதலும் வேண்டும். விரதம் அனுட்டிக்க முடியாதவர்கள் ஏனையவற்றைச் செய்தின்புறுவர். புலாலுண்ணல் முதலியன வாய்ப் பிறநாட்களிற் சிலர் செய்யும் பாவங்கள் எல்லாம் இந்நாளில் தவிர்க்கப்படுதல் வேண்டும். நரகாசுரன் என்னும் ஓர் அசுரனுடைய கதை இத்திருநாளின் தொடர்பிற் கூறப்படுகின்றது.

முன்னொருகாலத்தில் 'நரகாசுரன்' என்னும் ஓர் அசுரனிருந்தான். அவன் தன் குடிகளை ஆசாரமற்றவர்களாக்கித் தீய வழியிற் செலுத்தித் துன்புறுத்தி வந்தான். உருத்திர மூர்த்தியின் ஆணைப்படி அக்குடிகளைக் காத்தருளும் பொருட்டு விஷ்ணு மூர்த்தியானவர் நரகாசுரனைக் கொன்றார். உயிர் நீங்கும் தருணத்தில் விஷ்ணுமூர்த்தியிடத்தில் நரகாசுரன் ஓர் வரம் வேண்டினான். தான் கொல்லப்பட்ட தினத்தில் ஸ்நானஞ் செய்து ஆசார சீலராய் விஷ்ணு மூர்த்தியை வழிபடுவோர்யாவர்க்கும் அருள் புரிதல் வேண்டும் என்பது அவன்கேட்ட வரமாகும். மலங்களாற் பந்திக்கப்பட்டு வருந்தும் உயிர்கள் சிவபரம் பொருளின் திருவருட் கரு[illegible] இன்புறுதலை இ[illegible] உணர்த்துவதாகும்.

தீவினை செய்தலைத் தவிர்த்துச் சைவாசாரத்துடன் கடவுளைநாள்தோறும் வழிபடுதல் மக்கட் பிறவி எடுத்தோர் தாம் உய்தியடையும் பொருட்டு ஒழுக வேண்டிய ஒழுக்காறாகும். நாள்தோறும் அவ்வாறு ஒழுக முடியாதோர் புண்ணிய தினங்களெனக் குறிக்கப்பட்ட நாட்களிலாயினும் அவ்வழியைக் கடைப்பிடித்தல் வேண்டும். அத்தகைய நாட்களுள் ஆண்டுக்கொருமுறை வரும் இத்திருநாளில் அடாதன என்பனவாய் வரும் மதுவருந்துதல் உயிர்க்கொலை புரிதல் என்பன எல்லாம் தவிர்த்து விதித்தவை செய்து இறைவழிபாடாற்றி நிற்றலே எவரும் இன்புற்று வாழுதற்கேற்ற வழியாகும்.

### தைத் திருநாளை அரசாங்க விடுமுறை நாளாக்குக

"உழவுத் தொழிலின் உயர்வைப் போற்றும் திருநாளாகத் தைப் பொங்கல் திருநாள் தமிழ் மக்களாற் சாதி மத பேதமின்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருவதால் இன்றுவரையுமுள்ளதுபோல் தைப்பொங்கல் திருநாளை அரசினர் விடுமுறை நாளாக்க வேண்டும்" என்று கொழும்புத் தமிழ்ச் சங்கம் அரசாங்கத்தைக் கேட்க முடிவு செய்துள்ளது.

சங்கத்தின் இல்லத்தில் சங்கத்தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம்அவர்கள் தலைமையில்13-10-57ல் நடைபெற்ற தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் மேற்படி பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அடுத்த ஆண்டு விழாவுடன் ஒரு ஆண்டுமலர் வெளியிடுவதென்றும், 1957-ம் ஆண்டு அச்சிடப்பட்ட தமிழ் நூல்களைச் சேர்த்து ஒரு தமிழ் நூற்காட்சி அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. இவற்றை நிறைவேற்ற ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (13-10-57) 5-30 மணிக்கு திரு. சி. இலஷ்மணன் எம். ஏ. அவர்கள் "புறநானூறு" பற்றி ஓர் ஆராய்ச்சிச் சொற்பொழிவு ஆற்றினார். இதைத் தொடர்ந்து இன்னும் மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் சொற்பொழிவு ஆற்ற இசைந்துள்ளார். இனிமேலும் கிரமமாக வெவ்வேறு இலக்கியச் சொற்பொழிவுகள் கொழும்புத் தமிழ்ச் சங்க இல்லத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எங்கள் அறிவித்தல்

நிகழும் ஐப்பசி மீ 6வ செவ்வாய்க்கிழமை (22-10-57 சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் தீபாவலித் திருநாளின் பொருட்டு மூடப்பட்டிருக்குமென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி ஸு ஐப்பசி மீ உ வ வெள்ளிக்கிழமை

## உழைக்க வழி உதவுதல் யார்கடமை

=O=

கடற் படைத் தளப் பொறுப்பு இங்கிலாந்திடமிருந்து இலங்கைக்கு கைமாறிவிட்டது என்று பிரதமர் பண்டாரநாயக்க களிபேருவகை கொள்கின்றார். கத்தியின்றி இரத்தமின்றிப் பாரதத்தின் விடுதலையைக் காந்தி மகாத்மா பெற்றுக் கொடுத்தார் என்பதுண்மை எனினும் பல்லாண்டுகளாக இந்துக்கள் இசுலாமியர் ஒற்றுமைக்கும் நாட்டின் பொருளாதார விருத்திக்கும் குடிவெறிக் கெடுமதியை அகற்றுவதற்கும் அயராது தேசத் தொண்டர்கள் உழைத்து ஆட்சியாளராலே தாக்கப்பெற்றும் தன்மான மிழக்காது தண்ணளியைக் கைவிடாது சாந்த மனப்பான்மையுடன் சத்திய நெறியில் காந்திப்பெரியாரும் தொண்டர்களும் நின்று வாதிடினார்கள், மெய் வருந்தினார்கள் விடுதலையென்னும் பயனைப் பேறுகப் பெற்றார்கள். ஈழ நாட்டிலோ மேடைப் பேச்சிலும் விண்ணப்பம் எழுதும் வேலையிலும் வீரங் காட்டிய தலைவர்களன்றி தேச சேவை இயக்கத்தில் ஈடுபட்டுப் பணியாற்றியவர்களில்லை. ஆகவே இலங்கையின் விடுதலையும் செவ்வாய்க்கிழமையன்று திருக்கோணமலைத் தளத்தை இங்கிலாந்து கைவிட்டுச் சென்றமையும் வீரர்களின் பேருழைப்பின் பயனாகவுள்ளனவல்ல என்பதை யாவருமறிவர்.

அதுஎவ்வாறாயினும், அந்தக் கப்பற் படைத் தளத்திலே ஆண்டுகளாக வேலையிலமர்ந்து இந்த மாற்றத்தினால் விலகியிருப்பவர்களின் கதியைப் பற்றிச் சற்று ஆராய்வோம். முதல் அமைச்சர் பண்டாரநாயக போலிப் பந்தர் போடுவதிலே புகழ் படைத்தவர். சொற்பெருக்கு விற்பன்னராகையால் வெற்றி பெற்

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### கல்விக் கடலிற் கடுங் கொந்தளிப்பு

கல்வி மந்திரியாரோகணமுந் தப்பாது வேலை செய்கின்றார் ஆனால் கல்விக் கடலில் அலை வீசியபடியேயிருக்கின்றது. கொந்தளித்தவண்ணமாயிருக்கின்றது.

கொடக்காவலத் தலைமை ஆசிரியர் மாற்றத்தினாலே ஊரிற் பரபரப்புண்டாகிவிட்டதாம். வடபகுதியிலும் இந்த நிலைமைக் கிடமிருக்கின்றதாம். பண்டத்தரிப்பு மயிலணி ஆகிய இடங்களிலுள்ள சச்சரவுகள் முடிவாய் மறையவில்லை.

### ஆங்கிலக் கல்வி அவசியமா?

ஆராய்ந்துண்மையை அறிவியுங்கள் என்று ஆணை பிறப்பிக்கின்றார் ஒரு உபசபைக்கு: இந்தச் சபைக்கு பேராசிரியர், விரிவுரையாளர், தலைமை ஆசிரியர் என்ற வகையில் ஆறு பேர் அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் தமிழ் பேசும் ஒருவராவது அந்த மதிப்பைப் பெறவில்லை மந்திரியிடம். தமிழ்பேசுவோர் பல்கலைப் பண்புள்ளவராகையாற் பன்மொழிப் பயிற்சியையும் விரும்புவார்கள் என்ற அச்சமா?

---

றுக் கொள்ளக்கூடியவகையிலே எந்தக் கேள்விக்கும் சமாதானம் கூறும் வல்லமை படைத்தவர். தனிச் சிங்களச் சட்டம் இயற்றிவிட்டுத் தமிழ் பேசும் மக்களைத் தாக்கமாட்டாது இந்த மாற்றம் என்று சத்தியஞ் சொன்னார். தமிழுக்கு நியாயமான உபயோகமென்று உடன்படிக்கை யுண்டுபண்ணிவிட்டு விலாங்குமதிகொண்டு அங்கொன்று இங்கொன்றுரைத்து எல்லாரையும் ஆறுதல் அடையும்படி முயற்சிக்கின்றார். திருக்கோணமலையிலும் இந்த முறையிலே வேலையற்றோருக்கு உள்ளங்குளிர உணர்ச்சி ததும்ப உறுதிமொழி கூறியிருக்கின்றார். என்ன விந்தை! என்னே மாசாலம்!!.

'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பதுதான் இப்பொழுது ஆட்சியாளரின் கொள்கை. கல்வி மந்திரியார் நிதிப் பகுதியாருக்கு நாழிகைக்கொரு உத்தரவு பிறப்பிக்கின்றார். எல்லோருக்கும் எல்லாவற்றையும் கொடுப்பதற்கு என்ன விரயம் உண்டாகும் என்று கூட நிதி அதிகாரிகளை வினவுகின்றார். இவ்வாறே ஏனைய அமைச்சர்களும் அவ்வளவோடமையாது அகிலமுஞ் சுற்றி உலவுகின்றார்கள். குபேரசம்பத்துள்ளவர்கள்போன்று மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி நடைபெறுகின்றது. திருக்கோணமலைத் தளத்திலே பல்லாண்டுகளாக வேலையிலமர்ந்து, ஆட்சியாளரின் வேண்டுகோளுக்கிணங்கி ஆங்கிலேயர் பொறுப்பைக் கைவிடுவதனால் உண்டாகும் நிலைமையில் வேலையில்லாது அல்லற்படுவதை எல்லாம் வல்ல இந்த அரசாங்கம் தடுக்க முடியாதா? அத்தனை ஆட்களுக்கும் உடனடியாக வேலை தேடிக் கொடுக்க முடியாதா?

### கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க அடையாளச்சீட்டு

——

பதினெட்டு வயசுக்கு மேற்பட்ட இலங்கையர் அனைவருக்கும் அடையாளச் சீட்டு வழங்க அரசாங்கம் ஆலோசிக்கின்றதாம். தபாற் கந்தோர்களிற் காசு பெறுதல் முதலியவற்றுக்கு இது பெரும் உதவியாயிருப்பதோடு கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கும் துணை புரியுமென்று கருதப்படுகின்றது.

———

### உதவி பெறும் ஆசிரியர்களுக்கு உதவி

அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளிற் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு அரசாங்க ஆசிரியர்களுக்குப்போல் இலவச புகையிரதப் பிரயாண வசதி, மருத்துவ வசதி, வீட்டு வாடகை ஆகியவைகொடுக்கப்படுமாம். கல்வி மந்திரியின் சாதகமான சமர்ப்பணம் காரணமாய் இது செய்யப்படுகிற தென்றும் இதனால், 25,000 ஆசிரியர்கள் நன்மை அடைவார்களென்றும் இத்தொடர்பிற் கூறப்படுகின்றது.

# அரசியலும் சமயமும் வேறல்ல

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் காட்டிய நன்னெறி

நல்லூர் ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்க 24-ம் வருடாந்த மகாநாடு வடமாகாண அதிபர் ஸ்ரீ ம ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ. வ. கிருஷ்ண பிள்ளையவர்கள் வரவேற்புரை கூறினார். அவர் பேசும்போது எமது இலங்காதீபமானது சரித்திரப் பெருமையோடு கூடியது. நவநிதிக் கிழவனாகிய குபேரனால் ஆளப்பட்டது. அவனே சிவபக்தன், சிவனோடு தோழமை பூண்டவன். மக்களுக்கு எவ்வித குறைபுமின்றிப் பரிபாலித்தவன். அவன் வழி வந்த சைவப் பெருங்குடி மக்களாகிய நாம் பெருமைமிக்கவராக வாழ்ந்து வருகிறோம். இதேபோல இலங்கா தீபத்தில் தென்பாரிசத்தில் வாழ்ந்து வரும் சிங்களப்பெருமக்களும் இந்நாட்டு மகாவிஷ்ணுவினால் காவல்காத்துவரப்படுவதாகக் கூறிக்கொள்கின்றனர். இரு கடவுளர்களையும் நாம் பண்டுதொட்டு இன்றுவரை பேதம் பாராட்டாது ஒன்றாக வழிபட்டு வருகிறோம்.

எமது ஈழநாட்டின் வடபாரிசத்தில் சிறப்புற்று விளங்கும் நல்லூரானது முன் இராசதானியாக அமைந்து விளங்கியதுடன் சேகராசசேகரன், பரராசசேகரன் முதலிய மன்னர்களால் சைவமும நன்கு வளர்க்கப்பட்டு நிதியும் ஓங்க ஆளப்பட்டு வந்தது. அத்துடன் நல்லூர் முருகப்பெருமானின் திவ்விய க்ஷேத்திரமாயுமமைந்திருக்கிறது.

இச் சைவவித்தியா விருத்திச் சங்கம் தோற்றுவதற்கு வழிகாட்டியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் அவதரித்தது இந்நல்லையம்பதியிலே தான் எனப் பெருமிதங்கொள்ளும் உரிமையும் எமக்குண்டு.

பிரித்தானியர்களின் ஆட்சியின்கீழ் நம இலங்கை பல வருடகாலம் இருந்து வந்துள்ளது. அவர்களுடைய ஆளும் திட்டங்களில் ஒன்றான கல்வித் திட்டமானது சமயம் வேறு [illegible] பிரிவினையின் [illegible]யது. நம் மக்கள் இத்திட்டத்தின்கீழ்ப் பயிற்றப்பட்டு வந்தார்கள். அதன் காரணமாக சுயநிர்வாக மற்றவர்களாகவும் உத்தியோகமோகமுடையவர்களாகவும் ஒழுக்கவேறுபாடு உடையவர்களாகவும் நாட்டின் பல பாகங்களிலும் மலிந்தார்கள். அக்காலத்தில் மதமாற்றங்களும் நடந்து வந்தன.

இது கண்ட நம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருந்தகையார் வீறுகொண்டெழுந்து வீரப்போர் தொடுத்தார். அவர்களின் திட்டத்தினை முறியடித்து வெற்றியும் ஈட்டித்தந்து வழிகாட்டிச் சென்றார். அன்னாரின் கல்வித்திட்டப், சமயம், வாழ்க்கை, அரசியல் ஆகிய மூன்றனையும் வேறு வேறெனப் பிரியாது இணைத்து வைப்பது. இதனைக் குறிக்கோளாகக் கொண்டொழுகுவதே எமது ஸ்ரீ கணேச வித்தியாபிவிருத்திச் சங்கம் என்று கூறியதோடு மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்களின் சேவைச் சிறப்புக்களையும் சொற்பொழிவாளர்களையும் பாராட்டி யாவரையும் வரவேற்றார்.

---

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## இந்துச் சபைகளின் ஆலோசனைக் கூட்டங்கள்

இந்துக்கள் யாவருக்கும் நலன் தரும் கருத்துக்களைப் பரிமாறுதற்குச் சாதகமாகும்பொருட்டு இந்துச் சபைகள் எல்லாம் குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை ஒன்று கூடி ஆலோசனை செய்தல் இன்று தேவைப்படுவதாகத் தோன்றுகிறது. அப்படி ஒன்றுகூடி ஆலோசிப்பதால் எம்மவருக்கு நன்மை பல உண்டாகலாம். குறித்த ஆலோசனைக் கூட்டங்கள் தீர்மானம் எதையும் செய்யவேண்டியதில்லை. சமராச்சிய நாடுகள் ஒன்றுகூடிப் பல கருமங்களைக் கலந்தாலோசிப்பதுபோல் அவையும் அமையலாம். ஒவ்வொரு சபையும் தத்தம் திட்டத்தின்படி செயலாற்றலாம். வெளிஅதிகாரம் எதுவும் இன்றித் தத்தம் திட்டத்தின்படி செயலாற்ற ஒவ்வொரு சபைக்கும் பூரண சுதந்திரமிருத்தல் வேண்டும்.

பல்வேறு சாதனை முறைகளையும் தத்துவ சாத்திரங்களையுமுடையதாயிருக்கின்றது இந்து சமயம். அப்படியே வேறுபட்ட சபைகளின் சேவைத் திட்டங்களும் வேறுபடலாம். ஒரே சாதனை முறை இல்லாமையும் குறித்த ஒரே ஒழுங்குக்குட் கட்டுப்படுத்தாமையும் இந்து சமயத்தின் தனிச் சிறப்புக்களுள் ஒன்றாகும் என்பது இத்தொடர்பிற் குறிப்பிடத் தக்கது.

கட்டுப்பாடென்பதின்றி மேலே குறிப்பிட்ட முறையில் இந்துச் சபைகள் காலத்துக்குக்காலம் ஒன்றுகூடி ஆலோசனை செய்தல் இந்து சமயத்துக்குப் பெரும் நன்மை பயப்பதொன்றாகும்.

அவ்வாறு நடக்கும் ஆலோசனைக் கூட்டங்களுக்கு நிலையான தலைவரை நியமியாது வேறு வேறு தலைவரை மாறிமாறி நியமிப்பது விரும்பத்தக்கதென்பதும் இத்தொடர்பிற் குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

சு. சிவசுப்பிரமணியம்

கொழும்பு
11-10-57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கதிர்

இதழ் 2. [ 4 பக்கம் ] விலை சதம் 5.

விஜய தசமித் திருநாளிலே தோடங்கிய இந்துசாதனக் "கல்விக் கதிர்" ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் அரிய விஷயங்கள் கோண்டதாய்ப் பட்சந் தோறும் இதில் வெளிவருகின்றது.

'இந்துசாதன இளைஞர் கழகக் குறிப்புக்களும்' இக் கதிரில் ஒளிரும். இளைஞர் கழக உறுப்பினர் எழுதும் கதைகளும் பாடல்களும் இடம்பெறும்.

[☞ கடிதங்களை கல்விக்கதிர் ஆசிரியர், "இந்துசாதனம்" யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.]



## கல்வி விளக்கம்

### உலகை வாழவைக்கும் உயரியநெறி

—:0:—

"கற்றறிந்தார் கருத்துப்படி, மக்கள் என்றென்றும் மாணவரேயாவர். மேலைநாட்டுச்சமயபோதகராகிய பொப் இறந்த பிறகும் தன்னைத் தமிழ் மாணவனுகக் கூறிக்கொள்ள விழைந்தார்.



[கலாநிதி போப் ஐயர் அவர்கள்]

"பாடம் ஏறினும் ஏடதுகை விடேல்' 'பாடை ஏறினும் - ஏடதுகை விடேல்' என்ற நம் நாட்டுப் பழமொழிகள் நம்மை என்றென்றும் மாணவராகவே இருக்க வைக்கின்றன.

நல்ல மனிதர்கள் 'தாம் கற்றன சில, கல்லாதன பல' என்ற உள்ளத்தோடு என்றென்றும் புதுப்புது உண்மைகளை உற்றறிய அவாவுவர்.

அவர்கள் நூல் வழியும், இயற்கை வழியும் உயர்ந்தோர் வாழ்க்கை வழியும் பற்பல உண்மைகளை என்றென்றும் மாணவர் நிலையில் இருந்து அறிந்து கொண்டேதான் இருப்பர்.

ஆனல் கல்வியைப் பற்றிக் கவலையுருது ஏதோ படிக்க வேண்டும் என்பதற்காகப் படித்துப் பட்டம் பெற்ருே, பெருமலோ வாழ்வில் நிற்பார் இன்றைய உலகத்துப் பலராவர். அவர்கள் என்றென்றும் மாணவராக வாழ விரும்பாமையினுலே, பாவம்! அவர் தம் வாழ்வை இழந்தவராகவே ஆகின்றனர். அவர்களுக்காக இரங்குவதல்லது என் செய்வது! ஆம்! மனிதன் என்றென்றும் வாழும் வரையிலும் புத்தம் புதிய உண்மைகளை அறியும் நன்மாணவனுக வாழவே முயல வேண்டும். அதுவே அவனும் வாழ்ந்து உலகையும் வாழ வைக்கும் உயரிய நெறி.

#### கணக்காயர் என்ருல் யார்......?

கணக்காயர் என்பார் தாம் நன்கு பயின்றவராகி, தம் வழி பல மாணுக்கரைக்கொண்டவராய், அவர்களுக்குப் பாடஞ் சொல்லும் நல்லாசிரியர் என்பது தேற்றம்.

#### நன் மாணுக்கர்

கல்விக்குஒருமைஉணர்வு தேவை. 'கை ஒன்று செய்ய விழி ஒன்று நாடக் கருத்தொன் றெண்ணும்'

இன்றைய மாணவர் உலகுக்கு இந்த ஒருமை உணர்வு புரியாத ஒன்றுதான். என்ருலும் இந்த ஒருமை உணர்வும் ஒழுக்கநெறியும் அற்றவர் மாணவராக வாழ முடியாது.

x x x

இன்று இந்த இருபதாம் நூற்ருண்டின் இடையில் காண்கின்ற ஆசிரியர் மாணவர் தொடர்புக்கும், அன்றைய தொடர்புக்கும் நிறைய வேறுபாடுகளைக் காணலாம்.

கல்லூரிகளில் நூற்றுக் கணக்கான மாணவரை முன் வைத்து அவர்கள் அறிந்து கொள்ளுகின்ருர்களா இல்லையா என்ற அக்கறையுங் கொள்ளாது ஏதோ ஒரு மணி நேரம் பேச வேண்டும் என்ற கடனுக்காகப் பேசிக் காலத்தைக் கழிக்கின்ற நல்லாசிரியர்களையும் அவர்களைப் போன்றே, படிப்பைப்பற்றிக் கவலையுருது, கட்ட வேண்டிய பணத்தைக் கட்டிவிட்டு, கல்லூரி வகுப்புக்கே தலைகாட்டாது காலங்கழிக்கும்'நன்மாணுக்கர்'களையும் கண்டு பழங் காலத்து ஆசிரியர் மாணவர் தொடர்பு இப்படித்தான் இருந்ததோ என்று முடிவு கட்டவேண்டா!

பழயகாலக்கல்விமுறைக்கும் இன்றைய கல்விமுறைக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன.

—பரமசிவானந்தம் செ. மா. ம. வெள்ளிவிழா மலர்,

# சைவ சமயக் கல்வி



தில்லை மாநகர் போற்றி, தில்லையுட்
செம்பொ னம்பலம் போற்றி யம்பலத்
தாடு நாடகம் போற்றி யென்றுங்
கென்றும் போற்றினும் என்றனக் கிறைவ
ஆற்றல் இல்லை யாயினும்
போற்றி போற்றிநின்
பொலம்பூ வடிக்கே.

—பட்டினத்தடிகள்.

### இனித்தமுடைய எடுத்த பொற் பாதம்

சைவ சமயிகளுக்குத் தமிழ் வேதம் தேவார திருவாசகம். அப்பர், சம்பந்தர் சுந்தரர் என்னும் மூவரும் திருவாய் மலர்ந்தருளிய திருவருட் செல்வப் பாடல்களை முறையே தேவாரம், திருக்கடைக் காப்பு, திருப்பாட்டு என வழங்கினர். [பெருந்திரட்டு, அவிரோத வுந்தியார் உரை என்பனவற்றிற் காண்க] மூவர் பாடலும் தேவாரம் எனப் பெயர் பெற்று வழங்கும்.

தேவார திருவாசகமும், சைவத் திருமுறையில் உள்ள மற்றும் பாடல்களும், திருப்புகழ் தாயுமானவர் பாடல் முதலியனவும் சைவ சமய உண்மைகளை விளக்குகின்றன.

தேவாரம் உபநிடதப் பொருளை இனிது விளக்குகின்றதென்பதை சித்தாந்த சிகாமணி செந்திநாதையர் அவர்கள் 'தேவாரம் வேதசாரம்' என்னும் நூலிலே விளக்கிக் காட்டியுள்ளார்கள். [அவுர் எழுதிய இந்த நூலினையும், சிவஞான போத வசனலங்கார தீபத்தினையும்அழிந்து போகா வண்ணம் வெளியிட்டுக் காப்பது சைவப் பெருமக்கள் கடனகும்.]

தேவாரம் சரியை,கிரியை யோகம், ஞானம் என்னும் நான்கு படிகளையும் விளக்குவதோடு,சைவத்திருநெறியின் உறுப்புக்களாகிய குருவருள்,திருவெண்ணீறு, திருவைந் தெழுத்து, திருக்கோயில், சிவன்றிரு உருவம் திருவடிச் சிறப்பு அருச்சனை, தொண்டு என்னும் எட்டனையும் தெளிவுற விளக்கும். தேவாரத்தின் சிறப்பினை நோக்கியே திருஞான சம்பந்தரடியார்களுள் ஒருவராகிய தத்துவப் பிரகாசரும்,

"பேசுவது தேவாரமேயலால் வாய்க்கெளிய பேய்க்கிரந் தங்கள் பேசோம்'' என்று நவில்வாராயினர். தேவாரத்தை முறைப்படி ஓதிச் சிந்தித்துத் தெளிதல் சைவசமயிகள் கடனகும்.

அகத்தியமா முனிவர் தமது சீடருக்கு அறிவுறுத்தியன இவ்வெட்டும் என்பது.

''குருவருளும் வெண்ணீ றெழுத் தைந்துங் கோயில்
அரனுருவும் என் றலைமேல் ஆககுந் — திருவடியும்
சிட்டான அர்ச்சனையும்
தொண்டும் சிவாலயர்க் கென் றிட்டார் அகத்தியனுர் எட்டு''

என்னும் பாவினல் விளங்கும்.

திருநாவுடையார் ஆகிய அப்பர் அருளிய தேவாரத்தில், சைவத் திருநெறி விளக்கம் செழிப்புற்று இலங்குகின்றது. 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' திருநாவுக்கரசர் ஞானவொளி புகட்டும் சற்குருநாதர் என்பதனை நன்கு அறிவாராவர்.

எப்பொருளைக் கூறுமிடத்தும் தெளிவுறக் கூறுவது நாவுக்கரசர்நன்முறையாகும்.

மக்களை விளித்து அவர் திருவாய்மலர்ந்த தேவாரம்:

"மனிதர் காள்இங்கே வம் ஒன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெனுங் கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே'',

என்பது.

நல்லாசிரியர் கல்விபுகட்டும் பான்மையாக கனிதந் தாற் கனி உண்ணவும் வல்லிரே! என்று கூறி 'கனி' ஒன்றனை அளிக்கின்ருர். எப்படிப்பட்ட கனி? எனில் 'ஓர் இனிய கனி'; யார்க்கு? 'ஏசற்றவர்கட்கு' [ஏசு-குற்றம்.] தாம் அநுபவித்த இனியகனியினையே எமக்கு அருளுகின்ருர். ஈசன் புனிதன். புனிதன் பொற்கழல் இனிய கனி. தில்லையம்பலத்தில் நின்று நடராசப் பெருமான் திருநடனம் கண்ட — கண்ணுரக் கண்டு உளமார உவந்த - அரசர், 'குனித்த புருவமும்' என்னும் தேவாரத்தில், "இனித்தம் உடைய எடுத்த பொற்பாதம் கண்டு அநுபவித்த இன்மையைக் கூறுகின்ருர்.

"குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற் பாதமுங் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநி லத்தே''

["கூத்தப்பிரானது கோலத்தைக் காணும் பேறு வாய்த்தால், அறிஞர்களாலே சுமை என்றுவெறுக்கத் தக்க இப் பிறவியும் விரும்பி ஏற்றுக்கொள்ளப் பெறும் சிறப்புடையதாகும் என்பது கருத்து"]

சிவபெருமான்'இனியன்' என்பதை 'கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்' என்னும் தேவாரத்தில் விளக்குகின்ருர்.

"கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல் லாரினும்
தனிமுடி கவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே",

"மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநலம் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே."

— சேக்கிழார்.

ஜீ. ஸீ. ஈ. இலக்கியம்

திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்

அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.

விலை சதம்: 50.

மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசாதன

# இளைஞர் கழகம்

——.........0.........——

**இளைஞர்காள்,**

சந்திரனை விரும்பாதவர் இவ்வுலகத்தில் இல்லை. ஆடவரும், மகளிரும், இளைஞரும் சந்திரனை விரும்புவர் - அழைப்பர். அம்புலிமான் குழந்தைகளுக்கும் இன்பம் அளிக்கும் பொருள். இராமர், சந்திரன் வேண்டும் என்று அழுதார். மந்திரி கண்ணாடியிலே சந்திரனைக் காட்டினார். அழுகை ஓய்ந்தது

இப்பொழுது செயற்கைச் சந்திரன் ஒன்று பூமியை வலம் வருகின்றது. இதனைச் செய்து வான அரங்கில் விட்டவர்கள் ரஷ்ஷிய (சோவியத்து) விஞ்ஞானிகள். அமெரிக்க விஞ்ஞானிகளும் ஒன்றனைச் செய்துவிட நினைத்தார்கள். சோவியத்து விஞ்ஞானிகள் முந்தி விட்டார்கள். 4-10-57 முதல் இந்தச் செயற்கைச் சந்திரன் வானவெளியிலே பூமியைச் சுற்றி ஓடுகின்றது.

இந்தச் செயற்கைச் சந்திரகோளத்தின் நிறை 180 இருத்தல். விட்டம் 23 அங்குலம். 12-ந் திகதி வரை, செயற்கைச் சந்திரன் பூமியை 115 முறை வலம் வந்துள்ளது. 314400 மைல் சென்றுள்ளது.

இரண்டாவது செயற்கைச் சந்திரனின் 'கொடியேற்றம்' ஒரு மாதத்துள் நிகழும் என்று ரஷ்ஷிய விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார்.

விரைவில் சந்திர மண்டலத்துக்கு யாத்திரை செய்யும் வழிவகைகளும் ஏற்படுமாம். சிவசர்மா என்பவர் சந்திர மண்டலத்துக்கு யாத்திரை செய்தார் என்று காசி காண்டத்திலே ஒரு கதை உண்டு. வரப்போகின்ற சந்திர மண்டல யாத்திரை அதனை நினைவூட்டுகின்றது.

இ. க. ஆசிரியர்

## செயற்கைச் சந்திரன்

### நேரசூசி அமைப்பு

வானவெளியில் என்றென்றும் சுழன்றுகொண்டிருக்கக்கூடிய கோளங்களை ஆக்கமுடியும் என்று சோவியத்து விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மனிதன் படைத்துள்ள இம் மதி எந்தெந்த நேரங்களில் எந்தெந்த நாடுகளிலே காணப்படும் என்பதைக் காட்டும் நேரசூசி ஒன்றனை சோவியத் விஞ்ஞானி அமைத்துள்ளார்:

## அரசியலும் கல்வியும்

அரசியலுக்கும் நாட்டுக் கல்விக்கும்தொடர்பில்லாத நிலை என்று ஏற்படுகின்றதோ அன்று ஒருவேளை கல்வியும் அதைப் பயிலும் மாணவரும் அமைதியுற்ற நிலையில் வளரக்கூடும். ஆனால் இன்றைய போக்கு அந்தநாளை நெடுந் தொலைவில்கூடக் காட்டவில்லை என்பதுங் கண்கூடு.

— பரமசிவானந்தம்

## நம்பிக்கையில்லை

ஸ்ரீலங்கா அரசாங்கஆசிரியர் சங்கத்தின், மிரிகமக் கிளைக்கூட்டத்தில் விரிவுரை நிகழ்த்திய பீற்றர்பெரேரா அவர்கள் "கல்வி அமைச்சர் திரு. டபிள்யு. தகநாயக தேர்தல் தரகர்களின் வேண்டுகோள்கட்கு பட்டுமே செவி சாய்ப்பதால் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர 13000 ஆசிரியர்கள் தயாராயிருக்கின்றனர் என்று கூறினார்கள்.

# நாலடியார்

## கல்வி

### கச-ஆம் அதிகாரம்

ஆசிரியர் கோ. வடிவேலுச் செட்டியார் அவர்கள் பதிப்பினையும், பிற பதிப்புக்களையும் தழுவி எழுதப் படுவது.

கல்வியாவது கற்பதற்கு உரிய நூல்களைக் கற்றல்.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு.

குஞ்சி - மயிர்முடி, சிகை. கொடுந்தானைக்கோடு - (முடித்துக் கட்டுதலாகிய) வளைவுள்ள ஆடையினது கரை, நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் - யாம் நல்லவர்களாய் இருக்கக் கடவோம் என்கிற நடுவு நிலைமையைத் தருதலால், [வேறு உரைகள்: 'மனத்தில் யாம் நற்குணம் உடையோம் என்று காண்கின்ற கோணுதல் இல்லாத தன்மையால்'; 'மனத்தில் நடுவு நிலைமையால் நன்மை உடையோம் யாம் என்று சொல்லும்'.

தானை: முன்றானை ('முந்தானை') என்னும் வழக்கினை நோக்குக.

பொழிப்புரை: மயிரினைச் சீர்ப்படுத்தி முடிப்பதனாலும், ஓரங்களிலே பட்டுக் கரை போட்ட ஆடைகளைத் தரிப்பதனாலும் நல்ல பரிமளத் திரவியங்களை மெய்யிற் பூசுவதனாலும் உண்டாகின்ற அழகு அழகாகமாட்டா; நாம் மறுமைக்கு அஞ்சிப் பக்ஷபாதமில்லாமல் ஒழுக வேண்டும் என்கிற நடுவுநிலைமையைக் கல்வி உண்டாக்குவதால், அதனால் வரும் அழகே சிறந்ததாம்.

ஆங்கில மொழிபெயர்ப்பு:

The beauty of tbe hair, the beauty of the border of the encircling garment and the beauty of the fragrant saffron tint are no beauties but the beauty of learning is the only real beauty, for it endues one with the mental excellence by which he walks in a rightious path.

"மயிர்வனப்பும் கண்கவரு மார்பின் வனப்பும்,
உகிர்வனப்பும் காதின் வனப்பும் — செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த,
சொல்லின் வனப்பே வனப்பு.

— சிறுபஞ்ச மூலம்

[உகிர் - நகம், வனப்பு - அழகு.]

"இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின்வனப்பும்
நடைவனப்பும் நாளின்வனப்பும்—புடைசால்,
கழுத்தின்வனப்பும் வனப்பல்ல எண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு'

—ஏலாதி



# பிள்ளையார் காப்பு

வெண்ணிலாக் கற்றை கான்று
விளங்குமோர் பிறைக்கோடின்றி
எண்ணிலோர் பாகங் கூந்தற்
பிடியென விருந்த வாற்றாற்
பெண்ணொரு பாகம் வைத்த
பிஞ்ஞகன் உருவு காட்டும்
அண்ணலங் களிநல் யானை
அடிமலர் சென்னி வைப்பாம்.

— கூர்ம புராணம்

இதன் பொருள்:— எண்ணில் ஓர்பாகம் - ஒன்றானும் அளவு படுத்தற்கு அரிய திருமேனியின் ஒருபகுதி, வெண்ணிலா கற்றை கான்று விளங்கும்—வெள்ளிய சந்திரிகைத் தொகுதியைப் பொழிந்து பிரகாசிக்கின்ற; பிறை ஓர் கோடு இன்றி - பிறைச் சந்திரனைப்போன்ற ஒப்பற்ற கொம்பு ஒன்றனை இல்லாமல், கூந்தல் பிடி என இருந்த ஆற்றால் - பிடர்க்கண் உரோமங்கள் செறிதலை உடைய பிடியானை போல் விளங்கிய தன்மையானும், ஓர்பாகம் - மற்றையொருபகுதி, கோடுஇருந்த ஆற்றால் - களிற்றியானை போலக் கொம்பொன்றனை உடைத்தாம் தன்மையானும், பெண் ஒருபாகம் வைத்த பிஞ்ஞகன் உருவு காட்டும் - உமாதேவியாரைத் திருவுருவின் ஓர்கூறாகக்கொண்ட சிவபிரானது திருவடிவத்தை இத்தன்மைத்தென்று காட்டியருளும், அண்ணல் அம் களிநல் யானை - பெருமைத் தன்மையும் அழகும் மதக் களிப்புமுள்ள நல்ல யானையாகிய விநாயகக் கடவுளது, அடிமலர் சென்னி வைப்பாம் - திருவடிகளாகிய செந்தாமரை மலர்களைச் சிரமீது யாம் சூடுவாம்.

## செயற்கைச் சந்திரன்

—o—

**"கண்ணன்"**

விந்தையான சந்திரன்
விண்ணகத்தில் வேகமாய்
அந்தரத்தில் ஆடி ஆடி
ஆரவாரஞ் செய்கி'து.

எந்திரத்தி னாலெழுந்
தியங்குகின்ற சந்திரன்
அந்தரோன்ற ரையினோடு
ஆறிரண்டு ருத்தலாம்.

விட்டமோர் முழத்தினோடு
விரலுமாறு கோண்டது
அட்டதிக்கும் ஓடியோடி
ஆழிஐந்து மூன்றனை
இட்டமாய் இயற்றியோர்
தினத்தினில் முடிகி'து
வட்டமாக வையகத்தைச்
சுற்றியே வயங்கி'து.

கருத்து: சக்தி ஒருகூறாகவும் சிவம் ஒருகூறாகவும் அமைந்துள்ள அந்தராரீசுர (அம்மையப்பர்)வடிவம் போல, ஒருபாகம் கொம்பின்றிப் பிடியுருவாகவும் மற்றொருபாகங் கொம்பிருந்து களிற்றுருவாகவும் காட்டும் வடிவமைந்த யானையாகிய விநாயகக் கடவுளின் திருவடிப்போதுகளையாம் சிரத்தின் மிசை தரிப்பாம்.

# மாணக்கர் மதிவள மன்றம்

(முற்றொடர்)

## 9-ம் பாடம்

### 51 சங்கப் பலகை தந்த படலம்

சங்காலத்திலே—புலமையுடையவர்களை அறிவதற்கு இறைவனாலருளப்பட்ட ஒரு பலகைதான் சங்கப் பலகை எனப்படும். இதனாலே இது சங்கப்பலகை தந்த படலம் எனப்பட்டது.

இதன் கதையைச் சுருக்கி இப்போது சொல்லுகிறேன். கவனமாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

வம்மிசசேகரன் ஆட்சி செய்த காலத்திலே—பிரமதேவர் காசியிலே பத்து அசுவமேத யாகங்கள் புரிந்தார்; (அசுவமேத யாகமென்றால் — குதிரையைக் கொன்றுசெய்யும்வேள்வி.) யாகங்கள் முற்றுப்பெற்ற பின்னர் சரசுவதி, காயத்திரி, சாவித்திரி என்னும் தமது மனைவியர் மூவரோடு கங்கை நீராடச் சென்றார். வழியிலே விஞ்சைய (கந்தருவ)ப் பெண்ணொருத்தி பாடிய கீதத்தைக் கேட்டுக் கொண்டு சரஸ்வதி நின்று விட்டாள்.

பிரமதேவர் மற்றிருவரோடும் சென்று நீராடிக் கரையேறுகையில் தாமதித்து வந்தசரசுவதி "நானின்றி நீராடியது தகுமோ" எனப் பிரமனைக் கோபித்தாள், "காலந் தாழ்த்தி வந்ததன்றியும் மேலும் கோபிக்கின்றாய்; குற்றஞ் செய்துவிட்டு மேலும் கோபித்த நீ இப்பழியை மனிதப்பிறவி யெடுத்து நீக்குவாயாக' என்று சபித்தார் பிரமதேவர்.

சாபத்தைக் கண்டு அஞ்சிய சரசுவதி "மனிதப் பிறவியெடுத்து மயங்குவதோ" என இரந்து வேண்டினாள்.

அதற்குப் பிரமதேவர்; உன் சரீரமாகிய முதலெழுத்து ஐம்பத்தொன்றனுள் ஆ முதல் ஹ வரையிலுள்ள நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டுப் புலவர்களாக அவதரிப்பர். அவ்வெழுத்துக்கள் எல்லாவற்றிலும் ஏறி நின்று அவ்வவற்றின் தன்மையையடைந்து இயக்குவது அகாரம். அவ் "அ"கரத்துக்கு முதல்வர் சோமசுந்தரக்கடவுளாவர்.

அவரே நாற்பத்தொன்பதாம் புலவராகிச் சங்கப் பலகையில் இருந்தருளி மற்றப் புலவர்களுக்கு அறிவைத் தோற்றுவித்தருளுவார் என்றார்.

இதிலே உன் சரீரமாகிய நாற்பத்தெட்டுப் புலவர்களாய் என்பதன் விளக்கத்தைக் கூறுகிறேன்; அதாவது, வடமொழியிலே முதலெழுத்துக்கள் ஐம்பத்தொன்று. அதன் விபரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| உயிரெழுத்து | 14 |
| விஸர்க்கம் | 1 |
| அநுஸ்வாரம் | 1 |
| வருக்கவெழுத்துக்கள் ஒவ்வொரு வருக்கத்துககும் | 5×5=25 |
| ய, ர, ல, வ | 4 |
| ச்ச, ஷ, ஸ, ஹ | 4 |
| ஜிஹ்வா மூலியம் | 1 |
| உபத்மாநீயம் | 1 |
| மொத்தம் | 51 |

எழுத்துக்கள் வடமொழியில உள்ளன.

பிரமதேவர் கூறிய படியே நாற்பத்தெட்டு எழுத்துக்களும் மனிதராகத் தோன்றின. அவர்கள் புலமையிற் சிறந்து புலவர்களாகி மதுரையையடைந்தனர்.

வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமே மனிதப் பண்பாட்டிற்கு அடிப்படை

—:0:—

"மக்களைத் தீச்செயல்களில் ஈடுபடவிடாது தடுக்கின்ற வல்லமை சமயத்துக்கு மாத்திரமே உண்டு. இலௌகீக வாழ்க்கை தன் பேரின்பப் பொக்கிஷம் என்னும் அதுவே பிறவிப் பயனின் முடிந்த முடிபு என்றும் எண்ணி அதிலேயே ஈடுபட்டு, சஞ்சலமுற்று, சீவியத்தில் அலுப்படைந்து, சோர்ந்து போய் வெறுப்புற்றுத் தடுமாறுகின்ற எத்தனையோ கோடி மக்களுக்கு உதவி புரிந்து அவர்களுக்கு நல்ல பாதையைக் காட்டுவதும் சமயமேயாகும். இவைகள் எல்லாவற்றையும்உள்ளடக்கியே சுவாமி விவேகானந்தர், சமயமே மனிதப் பண்பாட்டிற்கும், சீரான வாழ்க்கைக்கும் அடிப்படையானது என்று கூறினார். சமயமின்றேல் சன்மார்க்கமுமில்லை; நல்வாழ்வுமில்லை; மகிழ்ச்சியுமில்லை. ஆகவே நாம் மத சம்பந்தமான அறிவைப்பெற்று, சமய வாழ்க்கை வாழவேண்டும். இவைகளுக்கு மணிவாசகர் விழாபோன்றவை மிகமிக வாய்ப்பாக இருக்கும்." என்று காரைநகர் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற காரைநகர் மணிவாசகர் விழாச் சபைக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசும்போது அச்சபை உபதலைவரும், வடமாகாண ஆங்கில ஆசிரியசங்க முன்னைநாள் தலைவருமான திரு. ந. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இன்று உலகுக்குத் தேவைப்படுவது அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில்மாத்திரம் சீரான புனரமைப்பு ஏற்படுவதன்று. மக்கள் சமயத் துறையில் விழிப்படைந்து தங்கள் ஆத்தும சக்தியை மீட்டுக்கொள்வதே மிகப் பிரதானம்" என்று கலாநிதி இராதாகிருஷ்ணன் கூறியிருப்பதை ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கலாநிதி கு. தண்டாயுதபாணி பேசும்போது, நமது சமூகம் ஆலய வழிபாட்டை அலட்சியம் செய்யத் தொடங்கியமையினாலேயே நம் சமூகத்துக்குப் பலவித கஷ்டங்கள் ஏற்பட்டனவென்றும், நமது சமூகம் மேலோங்க வேண்டுமானால் ஒவ்வொரு தனி மனிதனும் ஆலய வழிபாட்டில் முக்கிய கவனம் செலுத்தவேண்டு மென்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் சமய நூல்களை மிக இலகுவான வசனநடையில் எழுதி வெளியிடுவதற்குச் சமயப் பேரறிஞர்கள் முன் வர வேண்டுமென்று குறிப்பிட்டார்.

வேறும் பலர் பேசியபின்னர் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காரைநகர்ச் சிவன்கோயிலில் திருவெம்பாவைக் காலத்தில் இம்முறை நடாத்தவிருக்கும் மணிவாசகர் விழாவுக்கு இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள பேரறிஞர்களைப் பேச்சாளர்களாக அழைத்தல்.

திருவாசக, திருவெம்பாவைக் கருத்துக்களை விளக்கும் ஒரு கலைக் காட்சியை நடாத்துதல்.

மணிவாசகர் விழா மலர் ஒன்று அச்சிட்டு வெளிப்படுத்துதல்.

விழா சம்பந்தமாக ஒரு பேச்சுப்போட்டிநடாத்துதல்.

# அணிந்துரை அரங்கம்

### கிரகங்களுக்கிடையிற் போக்கு வரத்து

—

ஏறக்குறைய ஐம்பதுவருடகாலத்தில் கிரகங்களுக்கிடையிற் போக்குவரத்து நடைபெறுமென்றும் ஈராயிரம் பேர் பிரயாணஞ் செய்யத்தக்க அணு சத்தியாலியங்கும் ஆகாயக்கப்பல்கள் அதற்கு உபயோகப்படுத்தப்படு மென்றும் அவை மணி ஒன்றுக்கு 2500 மைல் தூரம் பறக்கு மென்றும் கூறப்படுகின்றது.

—

### தமிழ் மகள் ஏழாவது ஆண்டு மலர்

(ஏவிளம்பி வருஷம்)

ஆசிரியை:
ஸ்ரீமதி மா. மங்களம்மாள்.
விலை. ரூபா: 2/-

பொதுவாக நாட்டு நலன் கருதியும் சிறப்பாகப் பெண்கள் நலன் கருதியும் 'தமிழ் மகள்' ஆண்டு வெளியீடு வெளிவருகின்றது. அரசியல், சமயம், சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் அறிவூட்டும் கட்டுரைகள் இம் மலரில் வெளிவந்துள்ளன.

## தேவகோட்டத்தில் சைவசித்தாந்த வகுப்பு ஆரம்பம்

சென்ற செவ்வாய்க்கிழமை பூரணையன்று (8-10-57) பிற்பகல் சுழிபுரம் "தேவதோட்டத்தில்" அம்மை அப்பன் சந்நிதியில் திரு. நா. சேனாதிராசா அவர்கள் தலைமையில் யோகி க. கார்த்திகேசு அவர்களால், சைவசித்தாந்த வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. திருவருட்பயன் சிவஞானபோதம் என்னும் ஞானநூல்களிலுள்ள, ஞானக் கருத்துக்களை யோகியார் திரளாய் வந்து கேட்ட சனங்கட்கு விளக்கிக் காட்டினார்கள். திருவருட்பயன், வகுப்பிலுள்ள ஒவ்வொரு ஆண் பெண்ணிடத்தும் இருக்க வேண்டு மென்றும், வகுப்பிற் சேர்ந்து படிப்பவர்கள் மது மாமிசம் உட்கொள்ளாது விபூதி உருத்திராக்கம் தரிக்க வேண்டுமென்றும்; இறைவனை இடையறாத் தியானம் செய்ய வேண்டுமென்றும், திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் சிவன்கோயில், அம்மன்கோயில், சுப்பிரமணிய சுவாமி கோயில்கட்குச் செல்லவேண்டு மென்றும், யோகியார் சொல்லிமுடித்த பின், திரு. க. தம்பையா உபாத்தியாயர் அவர்கள் "சைவசித்தாந்தம்" என்னும் விஷயம்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினார்கள்.

—

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 20—10—57 —— 26—10—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. தேகசுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. கந்தோர் நிலைமைகள் சமாதானமானவையாயிருக்கமாட்டா, கடைசி இரு நாட்களும் எல்லாவற்றிலும் மிகப் பழுதானவை.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

ஒரு நல்ல வாரம். உம்முடைய பகைவரின் வீழ்ச்சியைக் காண்பீர், தனலாபமும் வழக்கில் வெற்றியும் நிச்சயம். ஆனால் குடும்பச் சூழலில் எல்லாம் நல்லாயில்லை.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

குடும்பச் சூழலிற் பிழை எண்ணங்கள் இடைவிடாமல் உண்டானபடியேயிருக்கும். தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்க மாட்டாது. உமக்கு மனச் சமாதானமிருக்க மாட்டாது. ஆனால் போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

மாதாவுக்குச் சுகவீனம் அல்லது மாதாவழி இனத்தவர்கள் மூலம் தொந்தரவுகளுக்கு இந்த வாரம் இடமுண்டு. நீர் வாகனங்கள் உடையவராயிருந்தால் அபாயங்கள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். உம்முடைய நண்பரில் நீர் அதிகம் தங்கியிருக்க வேண்டாம்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

பணத்துறையில் ஒரு நல்ல வாரம். அன்னியர் மூலம் இலாபங்கள் நிச்சயம். பழைய முதலீடுகள் நல்ல பலனைத் தரும். சமூக சித்தியும் புகழும் நிச்சயம் இளைய சகோதர சகோதரிகளுடன் சில சண்டைகளுக்கிடமுண்டு.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

நீர் இந்த வாரம் சண்டை தொடுக்க முந்துவீர், குடும்பச் சூழலிற் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. கண் நோய்களுக்கிடமுண்டு. ஆனால் உத்தியோகத் துறையில் நல்லவாரம்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

தேக சுகம் நல்லாயிருக்கமாட்டாது. சுரக்கோளாறுகளுக்கும் தலையிடிக்கும் இடமூண்டு. செலவதிகரிக்கும், கூடுதலான பொறுப்புகளை நீர் ஏற்கவேண்டிவரும்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

ஆரம்ப இடையூறுகளின் பின் நீர் உம்முடைய முயற்சிகளிற் சித்தியடைக் கூடி..தாயிருக்கும். பணத்துறையில் நல்ல வா... ஆனால் சில கூடுதலான செலவுகளை நீர் சமாளிக்க வேண்டிவரும். கண் நோய்களுக்கிடமுண்டு.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

ஒரு நல்லவாரம். எதிர்ப்பும் நீங்கிவிடும். உம்முடைய முயற்சிகளில் அதிக வருத்தமின்றி நீர் சித்தியடையக்கூடியதாயிருக்கும், இன்னும்கூடுதலான நல்லகாலம் எதிரில் வருகின்றது. ஆகையினாலே உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக,

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

வாரத்தின் முதல் நாள் கவனமாய்க் கழிக்க வேண்டும். ஆனால் வாரத்தின் மிகுதி நல்லாயிருக்கும். புகழும் வழக்கில் வெற்றியும் நிச்சயம்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

ஞாயிறு இரவும் திங்களும் செவ்வாயும் தொந்தரவானவையாயிருக்கும், உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபம் மூட்டக் கூடும். ஆனால் நல்ல காலம் எதிரில்வருகின்றது. ஆகையினாலே நீர் துன்பப்பட வேண்டாம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

உம்முடைய குடும்பத் துணைவருடன் நீர் இந்தவாரம் சண்டையிட வேண்டி வரக்கூடும். கந்தோர் நிலைமைகளும் அதிகம் நல்லாயிருக்கமாட்டா. ... வியாபாரமும் எல்லாவற்றிலும் பழுதானவையாயிருக்கும். ஆனால் அபாயமான விளைவுகள் உண்டாகமாட்டா.

### பாக்கிஸ்தான் முதல் மந்திரி

பாக்கிஸ்தான் முதல் மந்திரி ஸ்ரீ எச். எஸ். சுகிர்தவர்தி தமது முதல் மந்திரிப் பதவியைத் துறந்துவிட்டார்.

அவருடைய இடத்துக்கு ஸ்ரீ இஸ்மாயில் சுந்திரிகர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முஸ்லிம் சபை (முஸ்லிம்லீக்) யைச் சேர்ந்தவர்.

## கந்தபுராணம்

தெய்வயானையம்மை திருக்கலியாணப் படிப்பு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் சபை நாவலா மண்டபத்தில் நடைபெற்று வருகின்ற கந்தபுராணப் படிப்பின் ஒரு பகுதியாகிய தெய்வயானையம்மை திருக்கலியாணப் படிப்பு 4-10-57 வெள்ளிக்கிழமையன்றிரவு சிறப்பாக விசேஷ பூசை ஆராதனைகளுடன் நடைபெற்றது. பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் இருபாலை பண்டிதர் திரு. மு. வேதாரணியம் சரவணை திரு. வே சோமசுரந்தரம் திருவாளர்கள்: மு. வைத்தியநாதர், ச. திருஞானசம்பந்த பிள்ளை பொ. அப்புக்குட்டி, சிவஸ்ரீ ...திரக்குருக்கள் ஸ்ரீமத் கனகசபைக்குருக்கள் முதலியவர்கள் படிப்பிற் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

### வடபகுதியிற் பெரிய நெசவு நிலையம்

வட இலங்கையிற் பெரிய நெசவு நிலையமொன்றை அமைத்துச் செயலாற்றும் நன் முயற்சியைச் சில பெருமக்கள் ஆரம்பித்துள்ளார்களாம். இதற்கு வேண்டிய யந்திரங்கள் முதலியவைபற்றிய பேச்சுக்களே நடந்துவிட்டனவென்றுங் கூறப்படுகின்றது.

### மெய்கண்டதேவர் குருபூசை

—ப—

நாள்: ஏவிளம்பி ஞு ஐப்பசி மீ ௭௨ (23-10-57) புதன்கிழமை.
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு $6\frac{1}{2}$—7 கடவுளாராதனை தமிழ்மறையோதல்

ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்

இரவு 7—8 பிரசங்கம்
விஷயம்:
"மெய்கண்ட தேவர்"

சொற்பொழிவாளர்:

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர்அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 14-10-57.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14



**காணி விற்பனவு**

சாவகச்சேரி, ஹென்ஸ்மன் ரோட்டினை முகப்பாகவுடைய 'பறங்கித் தோட்டம்' என்னும் காணி 23 பரப்பு, துண்டுகளாகவும் பிரித்து விற்கப்படும். பின்வரும் விலாசத்துக்கு எழுதி விபரம் அறிக:

G. T. A. C/o
"யாழ் - அகம்"
சாவகச்சேரி


### பொலிகண்டி சைவவித்தியாசாலை புதுமண்டபத் திறப்பு விழா

மேற்படி விழா 6-10-57ல் நடைபெற்றது சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பல பெற்றோர் மாணவர்கள் புடைசூழக் கந்தவனச் சந்தியிலிருந்து ஊர்வலமாய்ப் பாடசாலைக்குச் சென்று அங்கு பாடசாலைக் கொடியேற்றி வித்தியா மண்டபத்தைத் திறந்து வைத்தனர். சைவவித்தியா விருத்திச் சங்கத்தாரால் வரவேற்புரை கூறப்பட்டபின் தலைவர் முன்னுரை நிகழ்த்தினர். அதன்பின் ஸ்ரீமான் ச. சூரசங்காரம், ஸ்ரீமான் க. ச. அருணந்தி, பண்டிதர் சு. இராமசாமி, திருமதி ச. அமிர்தாம்பிகை அம்மையார் ஆதியோரால் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.


## மரண அறிவித்தல்

யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்கம் லிமிற்ரெட்


இல: 4, கண்டி ரேட், யாழ்ப்பாணம்.
பதிவு இல. M. 110

கீழ்க் காணும் மேற்படி சங்க அங்கத்தவர் மரணத்திரையினுள் மறைந்ததை மிகவும் விசனத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இறந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரண சேவைப் பணத்தைச் செலுத்தவும்.

| இறந்தவர் இல. | இறந்தவர் பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|
| 1882 | மு. சின்னம்மா | மன்னூர் | 10-10-57. |

இங்ஙனம்
த. இராசரத்தினம்
கௌரவ காரியதரிசி

M 133 18-10-57


# சைவச்சீலர் சபாரத்தினமுதலியார்

## எழில் மிக்க சாதனை செய்த இல்லறத்துறவி

### ஞாபக சின்னம் அமைத்து நினைவுகூருதல் சைவமக்கள் கடன்

—0—0—

இப் பெருந்தகைச் செல்வர் கொக்குவில் என்னுமூரிலே சைவ வேளாண் குல திலகராய் விளங்கிய சபாபதிப்பிள்ளை என்பவருக்கும் ஆச்சிமுத்தம்மையாருக்கும் அருந்தவப்புதல்வராகப் பிறந்தனர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சபாரத்தினம். இவர் உரிய காலத்தில் வித்தியாரம்பம்செய்யப்பெற்று அவ்வூர் சுயம்புநாதபிள்ளை ஆசிரியரிடம் தமிழ்க் கல்வி பயின்றனர். பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்ஐயா அவர்களைத் தமது சற்குருவாக அடைந்து அவரிடமும் கல்வி பயின்றனர். வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் திரு. த. கைலாசபிள்ளை அவர்களுடன் ஒருங்கு கற்றதுமல்லாமல் வித்துவ சிரோன்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களிடமும் பாடம் கேட்டனரென்ப.

பின்பு ஆங்கிலக் கல்வி கற்க விரும்பி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் படித்தனர். வடமொழியையும் நன்கு பயின்றனர். இவ்வாறு மூன்று பாஷைகளிலும் தேர்ச்சி பெற்றனர். இவர் இளமையிலேயே நல்லொழுக்கமும் ஈசுர பக்தியும் வாய்ந்தவர். நாவலர் பெருமானைத் தம் ஞான குருவாகவும் கிருபாகரசுப்பிரமணியப் பெருமானை உபாசனாமூர்த்தியாகவும் கொண்டவர். இதனால் இவர் சைவாபிமானமும் உள்ளத் தூய்மையும் உள்ளத்துறவும் பூண்டசீலராய் விளங்கினர்.

இவரது கல்வி அறிவு ஆற்றல் குணம் ஆதியவற்றையறிந்த இலங்கை அரசாங்கம் இவருக்கு முதலி

— செ. கோ. —

யார் என்னும் உத்தியோக பதவியைக் கொடுத்துச் சன்மானித்தனர். இதனால் இவரைச் சபாரத்தினமுதலியார் எனவும் மக்கள் அழைப்பாராயினர். இவர் தம் கடமையில் சிறிதளவேனும் தவறாது தாம் ஏற்ற உத்தியோகத்தைச் செவ்வனே நடாத்தினர். அதனால் அரசாங்கம் இவரிடத்தில் நன்மதிப்பு வைத்திருந்தது.

உத்தியோக பதவியில் இருந்தகாலத்திலும் ஆனடிக்கன்பு பூண்டு சைவானுஷ்டானமும் சிறிதும் தவறாது செய்துவந்தனர். சமய சம்பந்தமான பல கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிப் பல பத்திரிகைகள் மூலம் வெளியிட்டார்கள். இவர் காலத்தில் நிரீச்சுர வாதம் பரவி இருந்தது. அதை நாட்டிற் பரவா வண்ணம் தடுத்தற்பொருட்டு தருக்க வாயிலாகக் கண்டித்து வந்தார். உதயபானுஎன்ற பத்திரிகையில் குகதாசர்என்ற புனை பெயருடன் பல கட்டுரைகளை வெளியிட்டனர். முதலியாரது கண்டனங்களின் பயனாக நிரீச்சுரவாதம் தலைகாட்டாது தமிழ் நாட்டினின்றும் நீங்கியது. இவர் கவி பாடுவதிலும் வல்லவர். சுப்பிரமணியப் பெருமான்மீதும்முனியேஸ்வரர் மீதும் தோத்திரப் பாமாலை புனைந்துள்ளார்கள். இதனால் இவர் யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர் வரிசையிலும் ஒருவராகப் பெரும் புலவர்களால் மதிக்கப் பெற்றனர். இவரால் எழுதப்பட்ட நூல்கள் சிவான்மபேதம் ஈச்சுர நிச்சயம், இந்து மதத்தின் முக்கியாம்சங்கள் பிரபஞ்ச விசாரம் திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் சரித்திரம் முதலியனவாகும். ஈச்சுர நிச்சயம் என்ற நூல் இப்போது இரண்டாம் பதிப்பாக முதலியார் மருகர் வேண்டுகோளின்படி திருமயிலை சைவப் பெரியாரும் முதலியாரின் மதிப்புக்குரிய சைவத்தொண்டரும் சீடருமாகிய திரு சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. இந்நூல் இக்காலச் சமயச்சூழலுக்கேற்பப் படிக்கச் சிறந்ததாகும். முதலியார் அவர்கள் பழைய பழக்கவழக்கங்களையுடையவர். சைவ சாஸ்திரங்களை நன்கு கற்றவர். தற்புகழ்ச்சி, இடாம்பீகம் இல்லாதவர். சாந்த சீலர், திறமை மிக்க இல்லறத்துறவி. அடக்கம், தவம் வாய்மை ஆதியாம் குணங்கள் நிறையப் பெற்றவர். ஆலய வழிபாடு சிறிதும் தவறாதவர். சைவநிந்தனை, மறைகள் நிந்தனை பொறுமனமுடையவர், வைதீக சைவரால் போற்றப்படுபவர். தமிழ் நாட்டிற் சைவ நூல்களை ஆங்கிலத்தில் முதல் எழுதி வெளிப்படுத்திய பெரியோர் மூவருள் இவரும் ஒருவராவர். இச்சைவப் பெரியாரது ஆத்ம நண்பர்கள் சுன்னாகம் புலவர் சிகாமணி அ. குமாரசாமிப்பிள்ளை வேலணையூர் புலவர் ஸ்ரீ கந்தப்பிள்ளை உபாத்தியாயர் நல்லூர் ஸ்ரீ த. கைலாசபிள்ளை முதலானோர். இவர் இராமேஸ்வரம் தொடக்கம் சிதம்பரம் காசி ஈறாகப் பல புண்ணிய தலங்கட்கு யாத்திரை செய்தனர். அதுவுமல்லாமல் தென்னிந்திய சைவ சித்தாந்த சபைகளின் வருடாந்த விழாக்களுக்கும் தலைமை வகித்துச் சைவப் பிரசங்கங்கள் செய்துள்ளார்கள். யாழ்ப்பாணத்திலும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்கள். வண்ணை சைவ சித்தாந்த பரிபாலனசபை இந்துக்கல்லூரி முதலான தாபனங்கட்குக் காரியதரிசியாக இருந்து தொண்டாற்றி உள்ளார்கள். தமது ஊரிலுள்ள சுப்பிரமணியர் கோயிலுக்குத் தருமகர்த்தாவாக இருந்து பணிபுரிந்தனர். பின்பு திருக்கேதீச்சரத் திருப்பணியிலும் ஈடுபட்டுழைத்தனர். ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஐயாவுக்குப் பின் திருக்கேதீச்சர நிலத்தை அரசினரிடம் வாங்கும்படி சைவ மக்களுக்குத் தூண்டுதல் செய்துகொண்டிருந்தார். இதனை முதலியார் அவர்கள் உதயபானுப் பத்திரிகையில் எழுதியகட்டுரை மூலம் அறியக கிடக்கிறது. இத்தகைய பெரியார் இற்றைக்கு 35 வருடங்கட்கு முன் ஐப்பசி மீ உத்திர நட்சத்திரத்தில் ஸ்ரீ நடேசப்பெருமாள் குஞ்சிதபாத நிழலிற் கலந்தனர். அந்நாளில் சைவ மக்கள் எல்லோரும் அஞ்சலிசெய்து முதலியார் அவர்களுக்கு ஞாபகம் அமைத்து ஆவன செய்க.

—::—

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 18-10-57, வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org